

Aulmighu Thillai Nataraja Temple - Chidambaram




# Part 5



Shri. A.V. Swaminatha Sivachariyar

# SIVAGAMAM

## Scope of this manual

**This manual explains some of the details of the Jeernoththaaranam, Sivagamam & Sivadheekshai**

DRAFT
V.S.Jayapal




Shree Ramanathaswamy Temple RajaGopuram - Rameswaram



# Contents

## Sivagamam


5.1 Jeernoththaaranam 548

5.2 சிவாகமங்களும் சிவதீக்ஷைகளும் 553

5.3 Recommendation from Sri. A.V. Swaminatha Sivachariyar 559


DRAFT
V.S.Jayabal



Aulmighu Vadapalani Andavar Temple - Chennai

உ

*Sivamayam*

SIVAGAMA KALANIDHI, SIVAGAMA CHELVAR, SAIVA SIDHDHANTHA SARABHAM

**A.V. SWAMINATHA SIVACHARIYAR**

FOUNDER & PRINCIPAL

SIVAPURAM VEDA SIVAGAMA PATASALAI, MAYILADUTHURAI.

Email : avssivachariyar@yahoo.com Web Site : www. sivapuramtrust.com

**RESI :**
No.41,4th Cross Anna Nagar,
Dharmapuram Road,
Mayiladuthurai - 609 001.
Tamilnadu, S. India.
☎ : 04364 - 226440
📱 : 9443126440

**PATASALAI :**
No. 32, Mayuranathar South Street,
Mayiladuthurai - 609 001.
☎ : 04364 - 223939

January 28, 2019

## JEERNOTHTHAARANAM

"Jeernoththaaranam" refers to the process of restoring and renovating temples. "Jeeranam" means damaged or dilapidated. "Uththaaranam" means to reinstate and renovate it. The Agama mention four different ways of performing Jeernoththaaranam. They are – "Aavartham", "Punaraavartham", "Anaavartham" and "Antharitham".

Anaavartham refers to a completely new construction of a temple and installation of new idols. Aavartham denotes replacement of damaged or stolen idols in an existing temple. Aavartham also refers to the process of building a new temple around an idol that might have been previously installed at some place. Essentially, Anaavartham means both the temple and the idol are new whereas Aavartham means that either one of them is new.

Punaraavartham refers to the process of renovating an existing temple – repairing damaged structures, redoing and re-painting the sculptures and reliefs in the main towers and sanctum towers. It also includes the application of new "Ashtabanthana Marunthu" wherever required. It concludes with the performing of the Kumbabishekam (Consecration) ritual.

The fourth method, Antharitham refers to the process of repairing and restoring idols and structures that might have been damaged due to sudden natural calamities, theft or due to the action of some wild animals. The Kumbabishekam performed in this case also includes purification rituals.

DRAFT V.S.Jayabal

A detailed analysis of these four types of Jeernoththaaranam are as follows: -

**Anaavartham:**

The procedure to be followed for constructing a new temple is as follows: -

- find a suitable place in a village or town after looking into the "Aayathi latchanam";
- initiate the process of "Sangusthapanam" and "Pelasthapanam" depending on the presiding deity of the proposed temple;
- construct the main tower (Rajagopuram), the shikhara (Gopuram), main hall (Mandapam), other associated shrines, corridors (Prakaram) by employing a "Sthapathi" well versed in the "Sirpa sasthiram";
- the construction should also take into account all the rules of "vastu shastra" (science of architecture);
- lastly, the Kumbabishekam rituals should be conducted by Sivacharyars / Pattacharyars according to the method prescribed in the Vedas and Agama.

**Aavartham:**

As previously mentioned, Aavartham is the type of Kumbabishekam where either one of the two elements (idol or the temple) is new. Nowadays, we find that many temples across the country are in ruins. The required renovation and Kumbabishekam are not performed regularly. In many places, temples that are of great historical significance has been reduced to nothing but a wasteland of trees and shrubs. It is sad to note that the gradual erosion of our country's cultural, spiritual and architectural splendour.

Given below is a quotation from the "Maanasaaram: Sirpa" –
"Aalayaathyangasarveshu heenathikyam pavethyathi. Rajarashtrathi
karthroonaam dhoshaprapthiri hochyathe!".

What it means is that if there are damages to the "Angam", Upaangam" and "Prathyangam" of a temple, it will have dire repercussions for both the ruler and the ruled. According to Agama, in case of these types of damaged temples, it is better to conduct the "Baalaalayam" ritual, install a Balalingam or Bimpasthapanam and continue the pooja till the renovation and construction of the temple is complete.

DRAFT
V.S. Jayakal

It is important to take special care of any idols and other valuable items till the construction work is complete. These can be reused in the renovated temple. Finally, once the restoration is complete, Kumbabishekam is to be performed according to Veda-Agama method.

The Agamas state that in case a temple is not taken care of for a long time, the gods and goddess of that temple will leave their shrines and start residing in that temple's Sthala Viruksham (the sacred tree) for a period of 12 months. If we have not initiated any work during this period, they will leave that tree and proceed to live in the "Surya Mandal" for a period of 12 years. If no initiative is taken even during this period, they will get annoyed and will start acting in a manner similar to birds that cannot find any food. They will then start cursing everyone involved with the temple – the owners, trustees, archakars and devotees. Hence, it is evident that many of these damaged temples do not house the gods anymore. This does not bode well for the nation.

Similarly, we also have to look into the damages caused to the idols (both granite and procession idols – "Panchalogam"). There may be some damages to these idols due to the nature of granite or the combination of the metals used. Also, there can be damages to idols due to natural calamities, thieves or animals. In this case also we have to consider the "Angam", Upaangam" and "Prathyangam" nature of the damages and rectify them immediately. According to Agama, in case there is damage in the Prathyangam (for example ornaments or fingernails of the idol) we can get it rectified. In case of damages in Upaangam (for example, fingers, ears or eyes), suitable modification or replacement can be made. In case of "Maha Angam" (main body) where rectification cannot be done, the granite idols can be immersed in the sea and a new idol can be made. The procession idol can be melted and cast again.

However, there are certain instances where the damaged idols are still kept in the temples. The reason for this is that the god or goddess had come in the dreams of the person immersing the idol and questioned them if they would do the same thing to someone from their family. In such cases, the damaged idols are kept in the temples with some minor restoration. Such instances highlight the faith and close relationship between the god and the devotee. A classic example of this is Sri Dhandayuthapani's idol in Palani. This idol is made of "Navapashanam" and was once highly eroded. However, the same idol was restored using more Navapashanam and is worshiped today affectionately by millions of devotees.

DRAFT V.S. Jayabal

Preservation of such temples is necessary for transmitting our cultural values to future generations. They also serve as important markers for students of history and archaeology.

The history of our country spans across many millennia. During the course of history many civilizations have risen and fallen. Each civilisation has left behind a valuable trove of architectural heritage. Many ancient palaces and monuments have now become tourist destination that attract visitors from across the globe. At the same time, many temples that were built during those times are now in ruins. It is of utmost importance that we salvage whatever we can from these temples and restore them to their past glory. Many items such as granite bars, engraved pillars, sculptures and idols can be reinstalled in the renovated temples. The idols that are slightly damaged can be restored using the knowledge mentioned in our ancient texts as well as modern techniques that science has made available to us today. Here, it is important to remember that both self-manifested idols and the idols that have been installed by the devas and rishis are free from "Jeerana dosham". Hence, they can be reinstalled with modification.

"Swayampuvathi lingeshu jeernadosho navithyathe" – this quotation has been taken from the Agama. It implores us to preserve the purity and sanctity of our temples and idols. Many of these temples were built thousands of years ago by learned Sthapathis under the patronage of many renowned kings. A lot of the art and skill that was involved in constructing these idols and temples are now lost to us. Also, poojas have been performed continuously in many of these temples by learned priests. The spiritual and divine grace that has accumulated over the years is immeasurable. Hence, even if some of these idols are beyond repair, it is advisable to keep them in a separate place for the viewing pleasure of devotees.

**Punaraavartham**

Puna-Aavartham means to reconstruct or renovate an existing temple. In this type of Kumbabishekam, both the elements (the idol and the temple) are the ones that existed before. Minor damages are rectified, the temple is painted and new Ashtapanthana marunthu is applied wherever necessary before performing the Kumbabishekam. It is better to avoid moving any of the old idols or constructing any new structures. However, in case it is necessary, it is better to consult with learned Agama scholars.

DRAFT V.S.Jayanthi

During Punaraavartham, it is advisable not to install a new “Yantra” as doing so would require moving the idol. It is possible that the idol may be damaged in this process. Similarly, in ancient temples, it is advisable not to build a new shrine for any god or goddess. If devotees feel the need to worship any particular god or goddess, they are advised to go to a temple that houses a shrine for that god. There is also a growing trend of installing idols of individuals (usually some prominent devotees, scholars or saints) in many ancient temples. This is unacceptable as it goes against our tradition. Our goal should be to preserve the sanctity of these temples. It is our moral responsibility to protect these ancient temples from such unethical practices.

**Antharitham:**

As stated before, Antharitham is the type of Kumbabishekam that is performed where a temple is affected by a sudden mishap. This may include natural calamities, theft or damage caused by some animals. The damaged structures are to be repaired and a purification ritual is to be performed as a part of the Kumbabishekam. Our ancient scriptures mention that it is important to ensure that all idols have sufficient Ashtapanthana marunthu. Failing to do so will lead to disastrous consequences. Hence, it is advisable to apply new marunthu and perform the “Antharitham” Kumbabishekam in such temples.

The above analysis does not by any means give a complete picture of “Jeernoththaaranam”. Extensive research and investigation of our ancient texts and scriptures is the need of the hour. It is our duty to contribute collectively and help preserve the sanctity and rich cultural heritage of our temples.

* * *

DRAFT V.S.Jayabal

# 14. சிவாகமங்களும் சிவதீக்ஷைகளும்

சிவாகம கலாநிதி - சிவாகம செல்வர்
**சிவஸ்ரீ A.V.சுவாமிநாத சிவாசாரியார்**
முதல்வர் - சிவபுரம் வேத சிவாகம பாடசாலை,
மயிலாடுதுறை.

**அம்மானே ஆகம சீலர்க் கருள் நல்கும்**
**பெம்மானே பேரருளாளன் பிடவூரன்**
**தம்மானே தண்டமிழ் நூற்புல வாணர்க்கோர்**
**அம்மானே பரவையுண் மண்டளி யம்மானே.** (சுந்தரர்)

**ஆரண மாகமங்கள ருளினா லுருவு கொண்டு**
**காரணன் அருளா னாகில் கதிப்பவர் இல்லையாகும்**
**நாரணன் முதலாயுள்ள சுரர் நரர் நாகர்க்கெல்லாம்**
**சீரணி குருசந்தானச் செய்தியும் சென்றிடாவே.** (சித்தியார் சுபக்கம்)

உலக நாயகனாகிய சிவபெருமான் ஆன்மாக்களின் மீது கொண்ட பெருங்கருணையினால் அவை உய்தற் பொருட்டு வேதாகமங்களை யருளிச் செய்திருக்கிறார். இவற்றில் வேதம் பொது எனவும், சிவாகமங்கள் சிறப்பு எனவும் வழங்கப்பெறுகின்றன. ஆன்மாக்கள் மலபந்தங்களினின்றும் நீங்கி இம்மையில் சுகானந்த வாழ்வும், அம்மையில் பேரானந்தப் பெருவாழ்வும் பெற வழி கூறும் நூல்களாக அமைந்துள்ளன சிவாகமங்கள். வினை நீக்கமும் வீடு பேறும் அருளுவது சிவபெருமானேயன்றி மற்றைத் தெய்வங்களால் இயலாது என்பதைக் கருத்தில் கொண்டே,

**"சைவத்தின் மேல் சமயம் வேறிலை அதில் சார் சிவமாம்**
**தெய்வத்தின் மேல் தெய்வம் இல்லெனும் நான்மறைச் செம்பொருள்**
**வாய்மை வைத்த சீர்த்திருத் தேவாரமும் திருவாசகமும்**
**உய்வைத் தரச் செய்த நால்வர் பொற்றாள் எம் உயிர்த்துணையே"**

சிவபெருமானை வழிபட்டால் பாசநீக்கம் பெறும் இயல்பினை,

**"பாச வல்வினை தீர்த்த பண்பினன்"**
**"பாசமான களைவார்"**
**"வந்தித்திருக்கும் தங்கள் வருமேல் வினையோடு**
**பந்தித்திருக்கும் பாவந்தீர்க்கும் பரமன்"**
**"திறம் கொண்ட அடியார் மேல் தீவினை நோய் வாராமே**
**அறம் கொண்டு சிவதன்மம் உரைத்த பிரான்"**

என வரும் ஞான சம்பந்தரது திருவாக்குகளாலும்,

**"உள்ளம் உள்கி உகந்து சிவன் என்று**
**மெள்ள உள்க வினை கெடும் மெய்மையே"**

என வாகீசப் பெருமானது திருவாக்கினாலும், இன்னும் பிறதமிழ்வேத ப்ரமாணங்களினாலும் அறியலாம். இனி, பாச நீக்கம் பெற மெய்யுணர்வும், உண்மையறிவினால் சிவ பூசையும், பூசையினால் பேரின்பமும் அடையும் வழி கூறும் நூல்களாக அருளிச் செய்யப்பட்டவையே சிவாகமங்களாகும். வேத சிவாகமங்களே பதி சாஸ்திரம் எனவும், மற்றயவை பசு சாஸ்திரம் எனவும் உள்ளதால் சித்தாந்த சைவ சமயத்திற்கு வேதாகமங்களே ப்ரமாணமாகக் கொள்ளப்பட்டு "வைதீக சைவம்" எனப் பெயருடையதாயிற்று. வேதகாமங்கள் பதிசாஸ்திரமாவது எவ்வாறெனில் ஆன்மாக்கள் தம்மையறிந்து வழிபட்டாலன்றி, அவற்றிற்கு மலநீக்கமும், வீடுபேறும் கிட்டாது எனும் பெருமானின் கருணை வெளிப்பாடே வேதாகமங்கள்

என்பதனால் அறியலாம். இதனை,

**"தொகுத்தவன் அருமறையங்கம் ஆகமம்"**
**"மறையும் பல பாடி மயானத்து உறையும்"**
**"நுணங்கு மறை பாடி"**

எனும் திருஞானசம்பந்தப் பெருமானது திருவாக்குகளாலும்,

**"நால்மறையோடு ஆறங்கம் சொன்னார்தாமே"**
**"பாடினார் சாமவேதம்"**

எனும் நாவரசரது திருவாக்குகளாலும்,

**"அண்டர் தமக்கு ஆகமநூல் மொழியும் ஆதியை"**

எனும் சுந்தரர் திருவாக்கினாலும், இன்னும் பிற பிரமாணங்களினாலும் அறியலாம்.

எனவே சிவபெருமானே வழிபடத்தக்கவர். அவரது வழிபாட்டிற்குச் சிவாகமங்களே விதி நூல் என்பது சைவத்தின் மரபாகும். இனி சிவபெருமானது வழிபாட்டிற்குச் சிவாகமங்கள் மட்டுமே விதி நூல்களாயிருத்தல் வேண்டுமோ எனில், இதற்கு அவர் அருளிய சிவாகமங்களிலேயே சான்றுகள் காணக் கிடைக்கின்றன. சிவசாஸ்திரம், வேதஸாரம், ஆகமம், சிவாகமம், சித்தாந்தம், ஆப்தவாக்யம் எனும் சிறப்பு பெயர்களால் போற்றப்படும் சிவாகமங்களையும், வேதங்களைப் போன்றே எழுதாக்கிளவியாக சித்தாந்தம் எனும் அளவில் சிவபரம்பொருள் முதலில் உமையம்மைக்கும், பின்னர் விஷ்ணுமூர்த்திக்கும் உபதேசித்தருளினார். இதுவே "ஆகமம்" எனும் பெயர் வரக்காரணமாயிற்று.

**"ஆகதம் பஞ்ச வக்த்ராத்து கதம் ச கிரிஜாநதே**
**மதம் ச வாஸுதேவேன ஆகமம் இத்யபிதீயதே"** **(காமிகாகமம்)**

இதன் பொருள் :-

| | | |
|---|---|---|
| ஆகதம் பஞ்ச வக்த்ராத்து | = | சிவபெருமான் திருவாய் மலர்ந்ததருளியது |
| கதம் ச கிரிஜானனே | = | உமையம்மையால் கேட்டருளப்பட்டது |
| மதம் ச வாஸுதேவேன | = | மஹாவிஷ்ணுவினால் ஏற்றுப்போற்றப்பட்டது. |

மேற்கூறிய மூன்று வரிகளின் முதல் எழுத்துக்களைச் சேர்த்தால் ஆகமம் என்ற சொல் வருவதையே காமிகாகமம் கூறுகிறது. சிவாகமம் ஒரே நூலாயில்லாமல் இருபத்தெட்டாக இருப்பதனால் இவை ஒன்றே பலவாக விரிந்து ஒருமுகப்பட்டக் கருத்தினைக் கூற இயலுமோவெனில்,

**"ஈசான வக்த்ராத் ஊர்த்வஸ்தாத் ஞானம் யத்காமிகாதிதம்**
**தசாஷ்டாதச பேதேன சிவருத்ர அவதாரகை:**
**ஷட்ஷஷ்டிபி: க்ரமேணைவ கதிதம் து சிவாக்ஞயா**
**ததைவ யுகபேதேன ஸத்யோ ஜாதாதி மூர்த்திபி:" (காமிகாகமம் - தந்த்ராவதாரவிதி படலம்)**

**இதன் பொருள்**

பெருமானிடத்து உபதேசம் கேட்டோரின் பக்குவத்திற்கேற்ப வேறு வேறு காலங்களில் வேறு வேறு சூழ்நிலைகளில் சிவபெருமான் தாமே மீண்டும் மீண்டும் உபதேசித்து அருளியவாறு: உமையம்மைக்கு அருளிய நிலையில் ஸூக்ஷ்மா = பரா எனும் நாதவடிவிலும், (நுண்ணுணர்வு மிக்க ஞானசக்தியாதலால் நாதத்திலேயே ஆகமம் அருளிச் செய்யப்பட்டது) ஸதாசிவ வடிவில் நின்று பஸ்யந்தீ எனும் பிந்து வடிவில் அநந்தேஸ்வரர் ஆகிய விஷ்ணு மூர்த்திக்கும், அதே வடிவில் நின்று மத்யமா எனும் எழுத்து வடிவ உபதேசமாக ஸ்ரீகண்டருத்ரருக்கும் உபதேசித்தருளி, உலகத்தவருக்குச் சென்றடையும் பொருட்டு தமது ஈசானம் தத்புருவும் அகோரம் வாமதேவம் ஸத்யோஜாதம் எனும் ஐந்து திருமுகங்களினாலும், ப்ரணவர் முதலிய அறுபத்தறுவர்க்கும் முன் கூறியது போல் பெருங்கருணைத் திருவுள்ளம் கொண்டு தாமே மீண்டும் அருளிச் செய்திருக்கிறார். உபதேசித்தருளியது ஒருவர். உபதேசம் கேட்டது பலர். கேட்டவர்கள் அனைவரும் ஒரே சமயத்தில் உபதேசம் பெற்றாரில்லை. இதனை மேற்குறிப்பிட்ட சுலோகத்தில் வரும் "யுகபேதேன" அதாவது பல யுகங்களில் அந்தந்த யுகதர்மத்திற்கேற்றவாறும் கேட்டோரின் பக்குவ நிலைக்குத் தக்கவாறும் விரித்தும், சுருக்கியும் ஆகமம் எனும் செம்பொருள் உபதேசிக்கப்பட்டு காமிகம் முதலான இருபத்தியெட்டுத் திருநாமங்களைத் தாங்கி ஞானக்கருவூலங்களாக நம்மை நெறிப்படுத்துகின்றன.

மேலும், "யுகபேதேன" என்பதற்குச் சிலபுராணச்செய்திகள் பின்னர் ஆகமங்களில் வருதற்கும் காரணமாயிற்று எனலாம்.

**"சிந்தாமணிரிவ ப்ராஜி சைகதா பஹுதா திசேத்**
**யத்யப்யேகோ பவேத்வக்தா ச்ரோத்ரு பேதாதநேகதா"** **(காமிகாகமம்)**

இதன் பொருள் :

சிந்தாமணி எனும் மிக்க ஒளிபொருந்திய மணியானது எப்படி ஒன்றேயாயினும் பலவாய் ஒளி வீசுமோ, அதுபோல சிவாகமங்கள் ஞானஜ்யோதிர் மயமான சிவபெருமான் ஒருவரிடத்தே தோன்றியனவாயினும் கேட்டோர் பலரானதால் பலவாய் ஒளிர்கின்றன. இனி யுகதர்மத்திற்கேற்றவாறு என்று கூறியதால் மூலச் செம்பொருள் முழுமையாய் கிடைத்திலதோ எனலாம். சிவாகமங்கள் ஒவ்வொன்றும் பல லக்ஷம் கிரந்தங்கள் (இவ்விடத்துச் செய்யுள் எனப்பொருள்) கொண்டவை. பின்னர் ஸனகாதி முனிவர்கள் ஸ்ரீகண்ட பரசிவத்தினின்றும் உபதேசம் பெற்ற இக்கால ஒழுகுதலுக்கு ஏற்ப குரு சிஷ்ய பரம்பரையாக அருளிச் செய்துள்ளார்கள். திருமுறைக்கண்ட புராணச் செய்தியும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. தில்லையில் நம்பியாண்டார் நம்பிகளும், இராஜராஜசோழரும் திருமுறை ஆசிரியர்கள் மூவரையும் எழுந்தருளப்பண்ணி தில்லை மூவாயிரவரொடும் சென்று திருமுறைகள் பாதுகாக்கப்பட்ட அறையினைத் திறக்க, சுவடிகளின் ஒரு பகுதி கரையான் புற்று மூடப்பட்டிருப்பதைக் கண்டும், அளவிலா ஏடுகள் பழுதாகியிருப்பதைக் கண்டும் மனம் நொந்தனர்.

"ஏந்து புகழ் வளவன் இவ்வாறன்பினாலே இடர்க்கடலின் கரைகாணா திணையுங் காலைச்
சாந்தமலை மகள் கொழுநனருளால் "வேத சைவநெறித் தலைவரெனு மூவர் பாடல்
வேய்ந்தனபோன் மண் மூடச்செய்தே ஈண்டு வேண்டுவன வைத்தோ" மென்றுலகிலுள்ள
மாந்தரொடு மன்னவனுங் கேட்குமாற்றால் வானகத்திலோலோசை எழுந்ததன்றே"

(உமாபதி சிவம் - திருமுறைக்கண்டபுராணம்)

என்றவாறு "ஈண்டு வேண்டுவன வைத்தோம்" என பெருமானின் அசரீரி அருளியது. எனவே இதுகாறும் சிந்தித்ததனடிப்படையில் இருபத்தியெட்டு ஆகமங்களும், கர்மமார்க்க ஞானமார்க்கங்களைப் போதிக்கும் ஞான நூல்களாகப் பரமசிவம் துவங்கி சந்தானக்ரம சம்ப்ரதாயம் இடையறாது குருசிஷ்ய பாரம்பர்யமாய் இன்றளவும் வருகிறபடியாலும், மாறுபட்டக் கருத்துக்களைத் தாங்கி நில்லாது ஒருமுகப்பட்ட செம்பொருள் வாய்மை வைத்த ஞானக்கருவூலங்களேயாம். இனி ஆப்தர் அருளிய ஆப்த வாக்கியங்களாகிய சிவாகமங்களே சித்தாந்த சைவத்தின் பிரமாண நூல்கள் என்றவாறு, காருடம், பூததந்த்ரம், பைரவம், நியாயம் உலோகாயதம், மீமாம்சகம், பௌத்தம், ஆருஹதம் எனப் பெருமான் அருளிச் செய்துள்ள சாஸ்திரங்கள் எண்ணிலடங்கா. மேலும், இவை சித்தாந்த சைவத்திற்குப் புறம்பாயினும், ஞானநூல் என்ற அளவில் சிவனருள் பற்றியே தோன்றின. சிவ சமவாதிகள், மாயாவாதிகள், ஏகான்மவாதிகள் போன்ற சைவப்புறம்பிகள் இந்நூல்களுக்குத் தங்கள் கருத்துக்கு ஏற்புடைய உரைகளையெழுதியும், முப்பொருள் உண்மையை மறுத்தும் எழுந்தார்கள். கடலிலிருந்து ஒரு சொம்பு நீர் கொண்டு வந்து வைத்துக் கொண்டு, அச்சொம்பு நீரே சமுத்திரம் என ஏதுக்களாலும் எடுக்கு மொழிகளாலும் வாதிடுவார் போல வேதாகம ஞானப்பெருங்கடலிலிருந்துச் சிதறியத் துளிகளைப் போன்ற மேற்படி நூல்களை வைத்துக் கொண்டு பரசமயங்கள் தோன்றின. அருணந்திசிவாச்சாரியாரின் சித்தியாரில் மேலும் கண்டுகொள்க. இனி சிவபெருமானுடைய ஊர்த்வ முகத்தினின்றும் ஸூக்ஷ்ம நாத வடிவில் முதற்கண் தோன்றியதாலும், சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை எனும் சித்தாந்த சைவக் கொள்கையே ஐயம் திரிபற எங்கும் பொதிந்திருப்பதாலும்,

**"சிவனே ஸ்தாபிதம் சைவம் சைவேனஸ்தாபித: சிவ:"**

எனும் காரணாகம வசனப்படி "சிவனால் அருளிச் செய்யப்பட்டது சைவம், சைவர்களின் முழுமுதற்கடவுள் சிவன்" எனும் நிலையில் சைவமே தமது உட்கருத்தாகவுடையதும், ஆதலால் சிவாகமங்களே பிரமாணங்களாயின.

**"ஹேயோபாதேய வஸ்தூனாம் நிர்ணயே பரமார்த்தத:**
**தத்ஸர்வமதரீ க்ருத்ய சைவ ஸித்தாந்த ஈரித :"** **(காமிகாகமம்)**

இதன் பொருள்

ஹேயம் = விட வேண்டியவை,

உபாதேயம் = எடுத்துக் கொள்ள வேண்டியவை.

இவற்றில் நிர்ணயம் செய்தலில் முழுமையான ஆய்வு செய்யப்படல் வேண்டும். இப்படி எக்காலத்தும் எங்கும், எல்லோராலும் ஏற்றுக் கொள்ளத் தக்கதையே "முடிந்த முடிபு" என்றும் சித்தாந்தம் என்றும் கூறுவர். சிவாகமங்களில் ஞானபாதம் முழுவதும், பெருமானுடைய தடஸ்த-ஸ்வரூப லக்ஷணங்கள் விளக்கப்பட்டு ஆன்மாக்களின் மீது கருணை கொண்டு ஸகள நிஷ்கள ஸகளாகள வடிவங்களில் அருள் பாலிப்பதையும், அவரது பெருங்கருணைத் திறத்தையும், மற்றைச் சிறுதெய்வங்கள் பெருமானது அருளாணைத் தாங்கி நிற்றலையும் எடுத்தியம்புகின்றன. ரௌரவாகம பாச விமோசன படலம் பனிரெண்டு சுலோகங்களையுடையது. இதுவே மெய்கண்டார் அருளிய சிவஞானபோத சாஸ்திரத்துக்கு மூலமாயிற்று. இதனை, "ஏவம் வித்யாத் சிவஞான போதே சைவார்த்த நிர்ணய:" எனும் பனிரண்டாவது சுலோகத்தின் வாயிலாக அறியமுடிகிறது.

இதனைத் தருமையாதீனத்தில் வெளியிட்ட "சிவஞானபோதத் தெளிவுரை" நூலிலும், காசிவாசி செந்தில்நாதய்யரின் "சிவஞானபோத வசனாலங்கார தீபம்" எனும் நூலிலும் காண்க. சிவபரம்பொருளே கடவுள். அவரே தியானிக்கப்பட வேண்டியவர். பூஜிக்கப்பட வேண்டியவர் எனும் சைவத்தின் முடிந்த முடிபாக சிவாகமங்கள் நிர்ணயம் செய்திருப்பதனால் "சைவ சித்தாந்தம்" எனும் சிறப்புப் பெயரை அடைந்துள்ளன. சைவ சித்தாந்த நூல்களாகவும், சித்தாந்த சைவ சமயத்தின் பிரமாணங்களாகவும் உள்ள இருபத்தியெட்டு ஆகமங்களையுமே பெருமான் தமது திருமேனியாகக் கொண்டருள்வதாக அனைத்து ஆகமங்களும் கூறுகின்றன.

**"ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க"**

என மாணிக்கவாசகர் கூறியருளியது சிவாகமக் கருத்தன்றோ! இங்கு அண்ணித்தல் என்பது காத்தருளல் என்பதாம்.

காமிகாதியிருபத்தெட்டு ஆகமங்களின் பெயர்களையறியுமாறு

| | | | |
|---|---|---|---|
| 1. காமிகம் | 2. யோகஜம் | 3. சிந்தியம் | 4. காரணம் |
| 5. அஜிதம் | 6. தீப்தம் | 7. ஸூக்ஷ்மம் | 8. ஸஹஸ்ரம் |
| 9. அம்சுமான் | 10. ஸுப்ரபேதம் | 11. விஜயம் | 12. நிஸ்வாசம் |
| 13. ஸ்வாயம்புவம் | 14. அனிலம் | 15. வீரம் | 16. ரௌரவம் |
| 17. மகுடம் | 18. விமலம் | 19. சந்திரஞானம் | 20. பிம்பம் |
| 21. ப்ரோத்கீதம் | 22. லலிதம் | 23. சித்தம் | 24. சந்தானம் |
| 25. சர்வம் | 26. பரமேஸ்வரம் | 27. கிரணம் | 28. வாதுளம் |

இனி சிவாகமங்களையருளிச் செய்த பெருமான் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு ஸ்வயம்பூ. தைவிகம், திவ்யம், மானுஷம் ஆர்ஷகம், ராக்ஷஸம், பாணம் என்னும் எழுவகை லிங்கத் திருமேனிகளைக் கொண்டருளி ஆலயங்கள் தொறும் எழுந்தருளியிருக்கிறார். இவற்றில்,

| | | |
|---|---|---|
| ஸ்வயம்பு | = | தானே தோன்றியருளியது |
| தைவிகம் | = | உமையம்மை ஸ்தாபித்தது |
| திவ்யம் | = | தேவர்கள் வழிபட்டது |
| மானுஷம் | = | மனிதர்கள் (அரசர் முதலியோர்) ஸ்தாபித்தது |
| ஆர்ஷகம் | = | ரிஷிகளால் பூஜிக்கப்பட்டது |
| ராக்ஷஸம் | = | அரக்கர்களால் ஸ்தாபிக்கப்பட்டது |
| பாணம் | = | அ) பாணம் மாத்திரம் வைத்து பூஜிப்பது<br>ஆ) பாணாஸுரனால் பூஜிக்கப்பட்டது<br>இ) கங்கை - யமுனை கண்டகி மானஸ ஸரோவரம் முதலிய புண்யதீர்த்தங்களில் இருந்து எடுத்து பூஜிப்பது. |

இப்படியாக எழுவகை இலிங்கங்களின் இலக்கணங்களைக் காரணாகமம் கூறுகிறது. மேலும், இலிங்க அளவின் ப்ரமாணத்திலேயே ஆலயம் அமைய வேண்டிய முறை பற்றிச் சிவாகமங்கள் விரித்துக்

கூறுகின்றன. பொதுவாகச் சிவாகமங்கள் ஒவ்வொன்றும் நான்கு பாதங்களையுடையன. அவையானவை,

1. சரியா பாதம் 2. கிரியா பாதம் 3. யோக பாதம் 4. ஞான பாதம்

இனி சிவாகமங்களைச் சிந்தித்த வகையில் சரியை கிரியை யோகம், ஞானம் எனும் நான்கு பாதங்களின் சிந்தனையோடு இக்கட்டுரையின் மற்றொரு பகுதியாகிய "சிவதீக்ஷையும்" திருவருளும், குருவருளும் துணைநிற்கச் சிந்திக்கப்படுகிறது.

**சரியா பாதம்**

சரியை என்பது திருக்கோயிலைத் தூய்மை செய்தல், நந்தவனம் அமைத்தல், சிவபூஜைக்கும், சிவனடியார்களுக்கும் தொண்டு புரிதல், சிவாலய நித்ய பூஜைகளுக்குப் புஷ்பம் சேகரித்துக் கொடுத்தல், திருமஞ்சன நீர் கொணரும் அடியவர்களுடன் பொருமானுடைய திருநாமங்களைப் புகழ்ந்து ஏத்துதல் ஆகியனவாம்.

இதனை,

**"போதொடு நீர் சுமந்து ஏத்திப்புகுவார் அவர்பின் புகுவேன்"**

என்றும்.

**"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீ வா**
**நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப்**
**புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்**
**பூமாலை புனைந் தேத்திப் புகழ்ந்து பாடித்**
**தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்**
**சங்கரா சய போற்றி போற்றி யென்றும்**
**அலைபுனல் சேர் செஞ்சடையெம் ஆதீயென்றும்**
**ஆரூரா என்றென்றே அலறா நில்லே"**

என்றும் நாவுக்கரசப் பெருமான் அருளிச் செய்திருக்கிறார். மேலும், சிவாகமங்களில் கூறப்பட்டுள்ள சரியா பாதத்தில் ப்ராயச்சித்த விதி, பவித்திர உத்ஸவவிதி, சிவலிங்க இலக்கணங்கள் மாஹேஸ்வர பேர இலக்கணங்கள் அடியவர் இலக்கணங்கள், அவர்களின் உபயோக சானதங்களாகிய ஜபமாலை, யோக பட்டம், தண்டம், கமண்டலம் முதலியவற்றின் இலக்கணங்களும், அந்தியேஷ்டி விதி, சிராத்த விதி முதலியனவும் அமைந்துள்ளன.

**கிரியா பாதம்**

இப்பகுதி நான்காகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவையாவன,

1. கர்ஷணம் 2. ப்ரதிஷ்டை 3. உத்ஸவம் 4. ப்ராயச்சித்தம்

**கர்ஷணம்:** நிலத்தை உழுதலைக் குறிக்கும் சொல். ஆலய நிர்மாணத்திற்கு முன்னதாக அஸ்திவாரம் அமைக்க அவ்விடத்தைத் தோண்டுதல், சகுணம் பார்த்துத் தேர்வு செய்தல், வாஸ்து இலக்கண சில்ப இலக்கண முறைப்படி ஆலயம் அமைத்தல் ஆகியனவாம்.

**ப்ரதிஷ்டை :** பெருமானுடைய இலிங்கத் திருமேனியை பீடத்தில் நிலைநிறுத்து தலைக்குறிக்கும் சொல். நிர்மாணிக்கப்பட்ட ஆலயத்தில் சிவபெருமானுடைய இலிங்கத் திருமேனி உமையம்மை, விநாயகர், முருகன் மற்றும் பரிவார மூர்த்திகள், சிவபக்தர்கள் ஆகியோரை ப்ரதிஷ்டை செய்யும் ஸ்தானங்களை முதலில் கூறுகிறது. அடுத்து பிரதிஷ்டையை மஹாகும்பாபிஷேக வைபவமாகச் செய்வதற்கு யாகசாலை அமைக்கவேண்டிய முறை, ஒருகாலம், இரண்டு காலம் எனத் துவங்கி சக்திக்கிசைய யாகபூஜைச் செய்தல், ப்ரதிஷ்டா மூர்த்திகளுக்கு அஷ்டபந்தனமருந்து சாத்துதல், அஷ்டமூர்த்தி நியாஸம், ஷடத்வ நியாஸம் முதற்கொண்டு ஸ்பரிசாஹுதி, நாடிசந்தானம் போன்ற மந்திரக் கிரியைகளை விளக்கி மஹாகும்பாபிஷேகம் செய்ய வேண்டிய முறைமை விளக்குகிறது. மேலும், நித்ய பூஜை (தின வழிபாடு) நைமித்தி பூஜை (ஏதேனும் ஒரு காரணம் பற்றி சிறப்பு வழிபாடு செய்தல் - உத்ஸவம் முதலியனவுமாம்) காம்ய பூஜை (விருப்பினொடு சிறப்பு வழிபாடு - சங்காபிஷேகம் முதலியன) ஆகியவற்றைச் செய்ய வேண்டிய கிரியை முறைகளையும் அதற்குண்டான மந்திரங்களையும் விரிவாகக் கூறியுள்ளன.

**உத்ஸவம் :** உத்-ஞானம், ஸவம் - ஸ்ருஷ்டி, படைத்தல் முதலிய பெருமானுடைய ஐந்தொழில்களை விளக்கும் நிகழ்ச்சியாகவும், தரிசிப்போருக்கு ஞானம் அளிப்பதாலும் உத்ஸவம் எனக்கூறப்படுகிறது.

நித்யோத்ஸவம் : தினமும் பூஜையின் முடிவில் செய்வது.

வாரோத்ஸவம் : வாரந்தோறும் வெள்ளிக்கிழமை, சோமவாரம் முதலிய நாட்களில் செய்வது

பக்ஷோத்ஸவம் : பிரதோஷம், அமாவாசை, பௌர்ணமி முதலிய நாட்களில் செய்வது.

மாஸோத்ஸவம் : மாதந்தோறும் கிருத்திகை, அஷ்டமி மற்றும் சிறப்பு நாட்களில் செய்யப்படுவது

வருஷோத்ஸவம் : வருடந்தோறும் செய்யப்படும் ப்ரம்மோத்ஸவம், ஸ்கந்த ஷஷ்டி, ஆடிப்பூரம், வினாயகர் சதுர்த்தி முதலியன

ஆகியவற்றின் நிர்ணயங்களும் சிவராத்ரி, நவராத்ரி ஆகியவற்றின் நிர்ணயங்களும் த்வஜஸ்தம்பத்தின் (கொடிமரம்) இலக்கணம் த்வஜ படத்தில் (கொடித் துணியில்) வரையப்பட வேண்டிய படங்களின் இலக்கணம், திருவிழா நாட்களில் சுவாமி வீதிவலம் வரும் வாகன இலக்கணம் போன்ற அனைத்துச் செய்திகளையும் கூறுகின்றன.

***பிராயச்சித்தம் :*** ப்ராய: = மறுபடியும், சித்தம் = நிறைவு செய்தல், அதாவதுமேற்கூறிய கர்ஷணம் ப்ரதிஷ்டை, நித்ய பூஜை, உத்ஸவம் முதலியனவற்றில் ஏதேனும் குறைகள் ஏற்படின், மறுபடியும் சிறப்புறச் செய்து நிறைவு செய்தல் என்ற பொருளில் வரும் சொல் பிராயச்சித்தம்.

***சிவதீக்ஷை***

மேலும், கிரியா பாதத்தில் ஆன்மாக்கள் சக்திநிபாதம் பெறும் காலத்தில் அவற்றிற்குத் தாமே குருமூர்த்தியாய் எழுந்தருளி சமய, விசேஷ, நிருவாண தீக்ஷைகளைத் தந்தருளும் அற்புதம் பேசப்படுகிறது. தீ - அளித்தல், க்ஷ - அழித்தல், அதாவது ஞானத்தை அளித்து. அறியாமையை அழித்தல் என்றும், ஆன்மாக்களின் மும்மலங்களையழித்து வீடுபேற்றினை அளித்தல் என்றும் தீக்ஷா என்ற சொல்லுக்குப் பல்பொருள் கூறியும் (இவ்விடத்துத் தருமையாதீனம் 26-வது குருமஹா சந்நிதானமாக எழுந்தருளியுள்ள குருமூர்த்திகள் கொடுத்துக் கெடுக்கும் இத்திறத்தை "குழந்தைகளுக்கு இனிப்புக் கொடுத்துத் திருந்துமாறு அறிவுறுத்தும் தாயின் கருணையை விட மேலானது பெருமானின் பெருங்கருணை" எனவியந்து போற்றுவார்கள்) விக்ஞானகலர் ப்ரளயாகலர், சகலர் எனும் மூவகை ஆன்மாக்களின் பேதத்தையும் அவற்றிற்கான தீக்ஷை பேதங்களையும் கூறுகின்றன. ஒருமலம் உடையோர் விக்ஞான கலர் எனவும் இருமலரும் உடையோர் பிரளயாகலர் எனவும், மும்மலங்களையுடையோர் சகலர் எனவும் கூறுமிடத்து, சகல ஆன்மாக்களின் தீட்சையில் சிவதர்மினீ, லோகதர்மினீ என இருவகையும் கூறுகின்றன.

சிவதர்மினீ முமுக்ஷுக்கள் எனப்படும் பற்றற்றாற்கும், லோகதர்மினீ இல்லறத்தார்க்கும் எனவும், லோகதர்மினீ தீக்ஷை ஞானவதீ, கிரியாவதீ என இருவகைப்பட்டு ஞானவதீயாவது சீடனின் அதிதீவிர பரிபக்குவ மறிந்த ஆசார்யர் தமது திருக்கண் நோக்கினால் சாக்ஷுதீ தீக்ஷையும், திருக்கைகளினால் தீண்டி ஸ்பரிச தீக்ஷையும், திருவாய் மலர்ந்து உபதேசித்து வாசகீ தீக்ஷையும், சீடர்தம் சிரத்தில் பொற்பாத மலர் வைத்துத் திருவடி தீக்ஷையும் என்ற முறைமையில் செய்தருளுவதாம். (திருப்பெருந்துறையில் பெருமான் மணிவாசகப் பெருமானை ஆட்கொண்டருளியதை ஓர்க). ஞானவதீ தீக்ஷாவிதியைக் காமிகாகமம் மற்றும் காரணாகமங்கள் சிறப்புறத் தெளிவுபடுத்துகின்றன. இனி கிரயாவதீ தீக்ஷையைப் பற்றிக் கூறுமிடத்து அநேகமாக எல்லா ஆகமங்களுமே விரித்துக்கூறியுள்ளன. மூலாகம ப்ரமாணங்களைக் கொண்டு பத்ததியாசிரியர்கள் பதினெண்மரும் தீக்ஷாவிதி எனும் நூல் அருளியுள்ளனர். இவற்றில் அகோர சிவாசாரியார், சோமசம்பு சிவாசாரியார் ஆகியோரது பத்ததிகளே முழுமையாய் கிடைத்த வகையில் திருவாரூர் நிர்மல மணிதேசிகர் அவர்கள் அகோர சிவாசாரியாரின் தீக்ஷாவிதி கூறும் "கிரியாக்ரம த்யோதி" எனும் நூலுக்கு "ப்ரபா" எனும் வியாக்யானம் (பேருரை) எழுதிய வகையில் மூலாகமங்கள், உபாகமங்கள், பத்ததிகள் என எல்லாவற்றிலிருந்தும் ப்ராமணங்கள் எடுத்தாண்டிருப்பதும், எங்கெல்லாம் ஐயம் நமக்கு



உ
Sivamayam
SIVAGAMA KALANITHI, SIVAGAMA CHELVAR, SAIVA SIDHDHANTHA SARABHAM

**A.V.SWAMINATHA SIVACHARIYAR**

FOUNDER & PRINCIPAL

SIVAPURAM VEDA SIVAGAMA PATASALAI, MAYILADUTHURAI.

Email: avssivachariyar@yahoo.com Web Site: www.sivapuramtrust.com

**Resi:**
No.41, 4th Cross Anna Nagar,
Dharmapuram Road,
Mayiladuthurai - 609 001.
Tamilnadu, India.
Cell:9443126440

**Patasalai:**
No.32, Mayuranathar South Street,
Mayiladuthurai - 609 001.
Ph:04364 - 241491
Cell: 9443489491

உ
சிவமயம்

Date: 25.07.2010

## திருவெள்ளரை ஸ்ரீபுண்டரீகாட்சப்பெருமாள் திருக்கோயில் பழைய ராஜகோபுரத்தைப் புதுப்பிக்கும் திருப்பணி

திருவெள்ளரை ஸ்ரீபெருமாள் திருக்கோயில் ராஜகோபுரத்திருப்பணி சம்பந்தமாக ஆலோசனைக் கேட்டார்கள். பொதுவாக பிரதிஷ்டை என்பது நால்வகைப்படுகிறது. அதில் மூன்றாவதாகிய புனராவர்த்தனம் என்ற பிரதிஷ்டை விபரங்களை காமிகம் காரணம் போன்ற சைவாகமங்கள் விரித்துக்கூறுகின்றன. கோபுரம் விமானம் மண்டபம் போன்றவை சிதிலமடைந்திருந்தாலும் வர்ணம் அழிந்துபோயிருந்தாலும் மீண்டும் புதுப்பித்து வர்ணம் தீட்டி கும்பாபிஷேகம் செய்வது புனராவர்த்தன ஜீர்ணோத்தாரண கும்பாபிஷேகம் அல்லது ஸம்ப்ரோக்ஷணம் எனப்படுகிறது. மேலும் பழமையாக கட்டப்பட்டு முழுக்கமடடையமல் உள்ள வடக்கு வாசல் ராஜகோபுரப் பணியை பூர்த்தி செய்து ஸம்ப்ரோக்ஷணம் செய்தலும் உத்தமமான விஷயமாகும் . எனவே திருவெள்ளரை திருக்கோயில் ராஜகோபுரத்திருப்பணிகளை அறநிலையத்துறையின் ஆலயபுனரமைப்புக்குழு பரிந்துரை செய்யும் வண்ணம் பழமைமாறாமல் புதுப்பித்துத் திருப்பணி செய்யலாம் என பரிந்துரை செய்கிறோம்.

இங்ஙனம்

SIVAPURAM VEDHA SIVAGAMA PADASALAI
21, Mayuranathar South St.
MAYILADUTHURAI-1

( ஏ.வி.சுவாமிநாத சிவாச்சாரியார் )
25.07.2010

## குறள் 4:



வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

**விளக்கம்:**

எதிலும் விருப்பு வெறுப்பு இல்லாத கடவுளின் திருவடிகளை மனத்தால் எப்போதும் நினைப்பவருக்கு உலகத் துன்பம் ஒருபோதும் இல்லை.

DRAFT
V.S.Jayabal

